**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 99 of 2024

DATE : 05.08.2025

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | பாலக்கருப்பன் | Caste | |
| Father/Husband's Name | முனியாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of August 2025

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் பிலவக்கல் டேமில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கும் எதிரி குடும்பத்திற்கும் ஏற்கனவே குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 27.08.2017 அன்று இரவு 9 மணிக்கு வழக்கின் எதிரிகள் பட்டுப்பூச்சி பஸ் ஸ்டாப் அருகே வைத்து 1வது எதிரி என்னை பார்த்து ஏலே புண்ட மகனே தேவடியா பயலே என்று தகாத வார்த்தையால் திட்டினார். 2வது எதிரி என்னை பார்த்து இவனை வெட்டினால் தான் குடும்ப பிரச்சினை தீரும் என்று கூறினார். 3வது எதிரி எனக்கு கொலை மிரட்டல் விடுத்து சென்று விட்டார்கள். அதன் பின்பு 9.30 மணி அளவில் இரண்டாவது எதிரி அருவாளை வைத்து இடது பக்க கையில் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார். (சாட்சி தன்னுடைய காயம்பட்ட பகுதியை காட்டி சாட்சியம் அளிக்கிறார்). நான் தடுக்க முயன்ற போது அருவாள் எனது கையில் பட்டு எனது இடது பக்க தோள்பட்டையிலும் வெட்டி காயத்தை ஏற்படுத்தியது. வலது கை கட்டை விரலிலும் காயம் ஏற்பட்டது. எதிரிகள் என்னை

பார்த்து என்னைக்கி இருந்தாலும் கொல்லாமல் விடக்கூடாது என்று மிரட்டினார்கள். காயம் பட்ட என்னை ரஞ்ஜித்குமார் மற்றும் மாடத்தி ஆட்டோவில் ஏற்றி வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 99 of 2024

DATE : 05.08.2025

Depositions of witness for Prosecution

PW: 2

| Name | ரஞ்சித் குமார் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | மணிகண்டன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of August 2025

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் பிலவக்கல் டேமில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஐத் தெரியும். கடந்த 27.08.2017 அன்று இரவு 9:00 மணி அளவில் அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. பின்னர் 9:30 மணியளவில் எதிரி ராமராஜ் கையில் வைத்து இருந்த அருவாளை வைத்து அ.சா.1 இடது பக்க கையில் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார். இடது கை தோள்பட்டை மற்றும் வலது கையிலும் காயம் ஏற்பட்டது. மற்ற எதிரிகள் அ.சா.1 யைப் பார்த்துக் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். காயம்பட்ட அ.சா.1 ஆட்டோவில் ஏற்றி வத்திராயிருப்பு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு